www.Padasalai.Net www.Trbtnpsc.Com

வகுப்பு : 11

தேர்வு எண்

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி - 2024

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

குறிப்பு: **அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14X1=14**

**ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. கீழ்கண்டவற்றுள் சாண்டில்யன் எழுதிய நூல் --------

அ) யவனராணி ஆ) வாடிவாசல் இ) கடல்புறா ஈ) காவடிச்சிந்து

2. ஒப்புரவு என்பதன் பொருள் -------

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

3. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் -------

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

4. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

5. சாகித்திய அகாதெமி விருது பெற்ற அப்துல் ரகுமானின் நூல் --------

அ) ஆலாபனை ஆ) சுட்டுவிரல் இ) பித்தன் ஈ) பால்வீதி

6. பேராசிரியர் சுந்தரனாருக்கு ராவ்பகதூர் என்னும் பட்டத்தை வழங்கிய பல்கலைக்கழகம் -------

அ) பெரியார் பல்கலைக்கழகம் ஆ) அண்ணா பல்கலைக்கழகம்

இ) தஞ்சை பல்கலைக்கழகம் ஈ) சென்னைப் பல்கலைக்கழகம்

7. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ) அ.முத்துலிங்கம் – யுகத்தின்பாடல் ஆ) பவணந்திமுனிவர் – நன்னூல்

இ) சு.வில்வரத்தினம் – ஆறாம் திணை ஈ) இந்திரன் – பேச்சு மொழியும், கவிதைமொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ

8. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல – இந்த
உலகமும் ஒன்றேதான் ...... – இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

9. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே -------- என்று தமிழில் வழங்கப்படும்.

அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

இ) வாழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

10. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள் ------

அ) வானம் இடிந்தது ஆ) மழைபெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

11. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு ------

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

12. திரை இசையில் ஏ.ஆர். ரகுமான் அறிமுகப்படுத்திய இசையின் பெயர் ------

அ) கல்யாணி ஆ) சூஃபி இ) பஞ்சமுகி ஈ) சிந்துபைரவி

13. சரியான விடையைத் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| அ) கல்வி அழகே அழகு | – | 1. | தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப்பாடல் ஈ |
| ஆ) இளமையில்கல் | – | 2. | திருமந்திரம் இ |
| இ) துணையாய் வருவது தூயநற்கல்வி | – | 3. | ஆத்திசூடி ஆ |
| ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | – | 4. | திருக்குறள் |
| | | 5. | நாலடியார் அ |

Pg.137 இயல் 4-1

அ) அ–2, ஆ–3, இ–4, ஈ–1 ஆ) அ–3, ஆ–4, இ–1, ஈ–2

இ) அ–5, ஆ–3, இ–2, ஈ–1 ஈ) அ–4, ஆ–1, இ–2, ஈ–5

14. குறுந்தொகையைத் தொகுத்தவர் -------

அ) பூரிக்கோ ஆ) உக்கிரப்பெருவழுதி இ) கூடலூர் கிழார் ஈ) நக்கீரர்

பகுதி – II

பிரிவு–1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3x2=6**

P.281 15. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

P.128-4 16. கற்றேன் என்பாய் கற்றாயா? என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்? Pg-281

P-62.1 17. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?

P.177.1 18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x2=4**

P.240 19. நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

J.137-2 20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

J.P.60.4 21. மதிப்புக் கூட்டுப்பொருள் என்றால் என்ன?

பிரிவு–3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7x2=14**

22. உறுப்பிலக்கணம் தருக. (ஒன்றனுக்கு மட்டும்)

J.P.314 அ) மெலிந்து ஆ) உண்டான் J.P-315

23. இலக்கணக் குறிப்புத் தருக.

அ) விரிகதிர் வினைத்தொகை ஆ) ஒரீஇய சொல்லிசை அளபெடை

மெலிந்து = மெலி + த்(ந்) + த் + உ பகுதி + சந்தி (விகாரம்) + இறந்தகால இடைநிலை + வினையெச்ச விகுதி

உண்டான் = உண் + ட் + ஆன் உண் – பகுதி + இறந்தகால இடைநிலை + ஆன் பால் வினைமுற்று விகுதி



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

24.புணர்ச்சி விதி தருக. (ஒன்றனுக்கு மட்டும்)

அ) புகழெனின் ஆ) மண்ணுடை

25.பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

அ) வித்தியாசம் ஆ) சரித்திரம்

26.கலைச்சொல்லாக்கம் தருக.

அ) Migration ஆ) Doctor of philosophy (Ph.D)

27.ஆக்கப்பெயர்கள் என்றால் என்ன? சான்று தருக.

28.மரபுப்பிழையைத் திருத்தி எழுதுக.

அ) கூகை அகவ, மயில் முழங்கியது

ஆ) மான் குட்டியைச் சிங்கக்குட்டி தென்னந்தோட்டத்தில் பார்த்தது

29.பொருள் வேறுபாடு அறிந்து ஒரே தொடரமைக்க.

புலி – புளி

30.கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.

முதலில் இது கஷ்டமாக இருந்தது, பின் இது சவுகரியமாய்ப் போச்சு

பகுதி – III

பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது.

32.மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

33.சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

34.கலைச்சொல்லாக்கத்திற்கும், அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?

பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

35."மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

36.ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

37.ஜீவாவின் பேச்சு நடைகுறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

38."என்னுயிர் தமிழ்மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.

பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. அ) சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) "இளைதாக முள்மரம் கொல்க களையுநர்

கைகொல்லும் காழ்த்த இடத்து" – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

40. பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

மகள் நிலை உரைத்தல் துறையை சான்றுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்

– பாரதியார்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் பொருத்தி எழுதுக.

இக்கரைக்கு அக்கரை பச்சை (அல்லது) சிறு துளி பெருவெள்ளம்

43. விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களை கண்டறிந்து எழுதுக.

1. கார்காலம், ------ குளிர்காலம்– ஐப்பசி, கார்த்திகை ------ மார்கழி, தை.
2. எழுத்து, சொல், ------, யாப்பு, ------
3. எழுத்து, ------, சீர், தளை, ------, தொடை.
4. சேரன்–வில், சோழன் – ------, ------ மீன்.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.

45. அ) சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக. (அல்லது)

ஆ) "கல்லும் கதை சொல்லும்" என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

47. அ) "சிற்றூரும் ......." எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.

ஆ) '...... நன்று' என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com